# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 10 | இஸ்லாம் | நேரம்: 3.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................................

மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடம்

**கவனிக்க:**
- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- ❖ உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

பகுதி-I

❖ **மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

01. ‘ஏகத்துவம்’ என்பதைக் குறிக்கும் அறபுப் பதம் யாது?
1) இக்லாஸ் 2) ஈமான் 3) தவ்ஹீத் 4) அகீதா

02. அல்லாஹ்வின் திருநாமங்களில் ‘அல்மு.ீ.தி’ என்ற திருநாமம் குறிப்பது
1) கொடுப்பவன் 2) உணவளிப்பவன்
3) செல்வந்தனாக ஆக்குபவன் 4) கொடையளிப்பவன்

03. பின்வருவோரில் அஜ்னபி யார்?
1) மனைவியின் தாய் 2) செவிலித்தாய்
3) தாயின் சகோதரியின் மகள் 4) மகனின் மனைவி

04. இஸ்லாம் வகுத்துத்தந்துள்ள மனித உரிமைகளில் காண முடியுமான பண்பு,
1) காலத்தால் இடத்தால் வேறுபடும் 2) சமத்துவம் பேணப்படாமை
3) ஏட்டளவில் இருப்பவை 4) காலாவதியாகாமல் நிலைத்து நிற்பவை

05. இரத்த உறவுக்குள் மஹ்ரமிக்கு உதாரணம் ,
1) மனைவியின் தாய் 2) மனைவியின் சகோதரி 3) மனைவியின் மகள் 4) தாயின் சகோதரி

06. தயம்முமின் உறுப்புக்கள் யாவை?
1) முகமும் இரு கைகளும் 2) முகமும் இரு கால்களும்
3) முகமும் தலையும் 4) தலையும் இரு கைகளும்

07. நபி(ஸல்) அவர்களைக் குறிக்கும் சொல்
1) ரப்புன் நாஸ் 2) ரஹ்மதன் லில்ஆலமீன்
3) ஹுதன்லின்னாஸ் 4) ரப்புல் ஆலமீன்

08. இளமைப்பருவத்தாரிடம் காண முடியாதது,
1) உடற்பலம் 2) கால அவகாசம்
3) ஆற்றலை வளர்ப்பதற்கான அவகாசம் 4) சமூக ஒத்துழைப்பின்மை

09. கற்பொழுக்கம் பேணி முன்மாதிரி ஆளுமையாகத் திகழ்ந்த நபி,
1) ஐயூப் (அலை) 2) யூசுப் (அலை) 3) ஸகரிய்யா(அலை) 4) தாவூத் (அலை)



kalvi.lk

10. வியாபாரப் பொருள் ஒன்று கொண்டுள்ள தகைமைகளுள் உள்ளடங்காதது,
1) சுத்தமானதாக இருத்தல் 2) விற்பவருக்கு சொந்தமானதாக இருத்தல்
3) கையிருப்பில் உள்ளதாக இருத்தல் 4) களஞ்சியப்படுத்தப்பட்டிருத்தல்

11. 'நான் உயிரோடிருந்து இஸ்லாம் மடிவதை விட இஸ்லாம் உயிரோடிருந்து நான் மடிவது மேலானது' என்ற கூற்றுக்கு சொந்தக்காரர்,
1) இமாம் அபூ ஹனீபா 2) இமாம் மாலிக் 3) இமாம் ஷாபிஈ 4) இமாம் அஹ்மத்

12. ரஹ்பானிய்யா என்ற பதம் தரும் கருத்து
1) துறவறம் 2) பொருத்தம் 3) அன்பு 4) அருள்

13. நபி(ஸல்) அவர்களிடம் சிறந்த தொழில் எதுவென கேட்கப்பட்டபோது அவர்கள் அளித்த பதில்
1) கைத்தொழிலும் வர்த்தகமும் 2) விவசாயமும் வர்த்தகமும்
3) வர்த்தகமும் நெசவும் 4) கைத்தொழிலும் தச்சும்

14. பின்வரும் நபிமார்களின் பெயர்களுக்கேற்ப அவர்களுக்கு வஹி அருளப்பட்ட முறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள தெரிவு யாது?

| நபிமார்கள் | வஹி அருளப்பட்ட முறை |
|---|---|
| 1) இப்றாஹீம் (அலை) | A. அசரீரி |
| 2) மூஸா (அலை) | B. சமிக்ஞை |
| 3) ஸகரிய்யா (அலை) | C. கனவு |

1. ABC 2. ACB 3. CAB 4. CBA

15. பின்வருவனவற்றுள் அஜ்னபி என்ற சொல்லின் பொருள் அல்லாதது,
1) அந்நியமானவர் 2) புதியவர் 3) உறவினர் அல்லாதவர் 4) மஹ்ரமானவர்

16. 'ரப்பனா லகல் ஹம்து' என்று ஆரம்பிக்கும் துஆ தொழுகையில் எந்நிலையில் ஓதப்படும்?
1) ஸுஜூதில் 2) இ∴திதாலில் 3) நடு இருப்பில் 4) ருகூவில்

17. நான் யார்? எங்கிருந்து வந்தேன் போன்ற வினாக்களுக்கு சரியான விடையைத் தருவது?
1) புலனறிவு 2) பகுத்தறிவு 3) வஹி அறிவு 4) விஞ்ஞான அறிவு

18. ஹுதைபிய்யா உடன்படிக்கை இடம்பெற்ற ஹிஜ்ரி ஆண்டு?
1) ஹி. 2ல் 2) ஹ. 3ல் 3) ஹி. 5ல் 4) ஹி. 6ல்

19. அப்துல்லாஹ் தனது தந்தைக்கு பாத்திரமொன்றில் தண்ணீர் கொண்டு சென்றான். திடீரென்று தேநீர் கோப்பையுடன் அங்குவந்த அவனது சகோதரி பாத்திமாவுடன் மோதவே அவர் கொண்டுவந்த தேநீர் அப்துல்லாஹ்வின் தண்ணீர் பாத்திரத்தில் கொட்டியது. இந்த நீர் எவ்வாறு அழைக்கப்படும்?
1) அல் மாஉத் தாஹிர் 2) அல் மாஉத் தஹூ
3) அல் மாஉல் முஸ்த∴மல் 4) மல் மாஉன் நஜீஸ்

20. நற்பண்புகள் என்பதைச் சுட்டிக்காட்டும் அறபு மொழிச் சொற்களுள் பிழையானது,
1) அக்லாக் ஹஸனா 2) மகாரிமுழ் ழுயூப் 3) மகாரிமுல் அக்லாக் 4) அதப்

21. முதன்மைப்படுத்தவேண்டியவை பற்றிய சட்டநோக்கு என்பதைக் குறிக்கும் அறபுப் பதம்,
1) பிக்ஹுல் மஆலாத் 2) பிக்ஹுல் அகல்லிய்யாத்
3) பிக்ஹுல் வாகி∴ 4) பிக்ஹுல் அவ்லவிய்யாத்

22. ஜாஹிலிய்யாக்கால மக்களது கோத்திர உணர்வு என்பதை சுட்டிக்காட்டும் சொல்,
1) கபீலா 2) ஷுஊப் 3) அஸபிய்யா 4) பஊஸ்

23. மறுமைநாளில் நபிமார்கள் 'ஹுதாக்களுடன் இருப்பார் என்று நபியவர்கள் குறிப்பிட்ட மனிதர்,
1) நம்பிக்கையும் நாணயமும் உள்ள வியாபாரி 2) நீதியான ஆட்சியாளன்
3) பெற்றோரை நன்றாகக் கவனித்த பிள்ளை 4) ஸாலிஹான் கணவன்

24. அதிகமான மக்கள் அலட்சியமாக நடந்துகொள்ளும் இரண்டு அருட்கொடைகள் என நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டவை?
1) ஓய்வு, தூக்கம் 2) ஆரோக்கியம், தூக்கம்
3) ஆரோக்கியம், ஓய்வு 4) ஓய்வு, சந்தோசம்

25. உள்ளத்தின் வகைகளுள் நப்ஸுல் முத்மஇன்னா எனப்படுவது,
1) தீமையை ஏவும் உள்ளம் 2) தன்னை நொந்துகொள்ளும் மனம்
3) திருப்தியடைந்த மனம் 4) திடுக்கிடும் மனம்


kalvi.lk

26. ஸுன்னா என்ற பதத்தின் கருத்தில் பயன்படுத்தப்படும் மற்றொரு சொல்,
1) இஜ்மா 2) ஹதீஸ் 3) கியாஸ் 4) குர்ஆன்

27. உடலோடும் செயலோடும் தொடர்புடைய இபாதத்
1) ஸகாத் 2) நோன்பு 3) திக்ர் 4) உழ்ஹிய்யா

28. நபி (ஸல்) அவர்களது ஆரம்பகால தவாவின் பிரதான இடமாகக் காணப்பட்டது,
1) தாருன் நத்வா 2) தாருல் அர்க்கம் 3) தாருஸ் ஸலாம் 4) தாரு அபூபக்கர்

29. அல்குர்ஆனில் எத்தனை இடங்களுக்கு மேல் ஈமானும் அமலும் இணைத்துக் கூறப்பட்டுள்ளது?
1) 50 இடங்களுக்கு மேல் 2) 60 இடங்களுக்கு மேல்
3) 70 இடங்களுக்கு மேல் 4) 80 இடங்களுக்கு மேல்

30. இஜ்மா அக்ஸரிய்யா எனப்படுவது,
1) தெளிவான இஜ்மா 2) மௌனம் சார்ந்த இஜ்மா
3) மறைமுக இஜ்மா 4) பெரும்பான்மையினரின் இஜ்மா

31. தூதரே என்னையும் ஒரு பதவியில் அமர்த்தமாட்டீரா? என வினவிய நபித்தோழர்,
1) அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் 2) அபூதர் அல் கிபாரி
3) முஆவியா 4) உமர் ரழியல்லாஹு அன்ஹும்

32. முஅவ்விதத்தைன் என அழைக்கப்படும் இரு சூராக்கள்?
1) பகரா, பாத்திஹா 2) பலக், அந்நாஸ் 3) இக்லாஸ், கவ்ஸர் 4) பலக், இக்லாஸ்

33. பின்வரும் குழுவினரில் அகீதா தொடர்பான சரியான சிந்தனை கொண்ட பிரிவினர்,
1) மு.ஃ.தஸிலா 2) கதரிய்யா
3) ஜபரிய்யா 4) அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஆ

34. தொடர்ந்து யாசகம் கேட்டுத் திரியும் ஒருவனின் மறுமை நிலை
1) முகத்தில் பிரகாசமற்ற நிலையில் வருவார்
2) முகத்தில் சதையின்றிய நிலையில் வருவார்
3) முகம் அழுகிய நிலையில் வருவார்
4) அழுத வண்ணம் வருவார்

35. நபியவர்களின் காலத்தில் அரேபியாவின் கிழக்கெல்லை,
1) சிரியா பாலைவனம் 2) அறபுக் கடல் 3) பாரசீக வளைகுடா 4) செங்கடல்

36. 'இஸ்லாமிய சட்டவியல் ஒரு நோக்கு' என்ற நூலின் ஆசிரியர்,
1) கலாநிதி சீ.வி. வீரமந்திரி 2) சிறிமா கிரிபாமுன
3) குமாரி ஜயவர்தன 4) பேராசிரியர் பத்மநாதன்

37. ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மனிதன் உணவுக்காக தனது வயிற்றில் ஒதுக்கவேண்டிய பகுதி,
1) மூன்றில் இரண்டு பகுதி 2) நான்கில் ஒரு பகுதி
3) மூன்றிலொரு பகுதி 4) இரண்டில் ஒரு பகுதி

38. பின்வருவனவற்றுள் நடுநிலைபேணல் என்பதை எடுத்துக்காட்டும் விடயம்,
1) பகலெல்லாம் நோன்பிருத்தலும் இரவெல்லாம் நின்றுவணங்கலும்
2) இம்மை வெற்றிக்காகவும் மறுமை வெற்றிக்காகவும் பிரார்த்தித்தல்
3) குடும்ப வாழ்வை துறப்பதும் துறவறம் பேணுதலும்
4) பகலில் உழைப்பதும் இரவெல்லாம் நின்று வணங்கலும்

39. பின்வருவோரில் ஒரு ஆணுக்கு திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்டவர்
1) மனைவியின் தாய் 2) செவிலித்தாய்
3) மகனின் மனைவி 4) மாமியின் மகள்

40. நற்குணத்தை சாராதது
1) பொறுமை 2) நம்பிக்கை 3) பணிவு 4) மோசடி

(40 x 1 = 40புள்ளிகள்)


kalvi.lk

## பகுதி - II

❖ **முதலாம் வினாவுக்கும் ஏனைய நான்கு வினாக்களுக்கும் விடையளிக்குக.**

01. 1. லுக்மான்(அலை) அவர்கள் மகனுக்கு செய்த உபதேசங்களில் இரண்டைக் குறிப்பிடுக.
2. ஆண்களுக்கு மணமுடிக்க ஹராமான நான்கு உறவுமுறைகளைக் குறிப்பிடுக.
3. வியாபாரப் பொருள் ஒன்று கொண்டிருக்க வேண்டிய தகைமைகளுள் இரண்டைக் குறிப்பிடுக.
4. ஜாஹிலிய்யாக் காலத்தில் பயன்படுத்தப்பட ஷுஊப், கபீலா ஆகிய இரு பதங்களும் எதனைக் குறிக்கின்றன?
5. குத்தாபுல் வஹி என்பதன் மூலம் யாது விளங்குகின்றீர்?
6. நஜீஸின் வகைகளுள் இரண்டை உதாரணங்களுடன் குறிப்பிடுக?
7. இபாதத்துக்களின் இரு வகைகளும் எவை?
8. அதிகமான மக்கள் அலட்சியமாக நடந்துகொள்ளும் இரண்டு விடயங்கள் என நபியவர்களால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவை?
9. விவசாயம் இரு வகைப்படும் அவை யாவை?
10. இஜ்மா, கியாஸ் தவிர்ந்த ஏனைய இரண்டு துணை மூலாதாரங்களைக் குறிப்பிடுக.

(10x2=20 புள்ளிகள்)

02. 1. தஸ்கியதுந் நப்ஸ் என்பதன் மொழிக்கருத்து யாது?
2. அல் குர்ஆன் விளக்கும் உள்ளத்தின் மூன்று நிலைகளும் யாவை?
3. சூரதுல் புர்கானில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுக்கப்பண்புகள் ஐந்து குறிப்பிடுக. (2+3+5=20 புள்ளிகள்)

03. 1. கியாஸ் என்றால் என்ன?
2. அர்கானுல் கியாஸைக் குறிப்பிடுக.
3. இஜ்மாவை ஆதாரமாகக் கொள்ளலாம் என்பதற்கு அல்குர்ஆன் ஹதீஸ் ஆதாரங்கள் ஒவ்வொன்று தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

04. 1. இஸ்லாமிய அடிப்படைகளைப் பேணி வியாபாரத்தில் ஈடுபடுவதால் வாங்குவோனும் விற்போனும் அடையும் பொதுப் பயன்கள் இரண்டு தருக?
2. இஸ்லாமிய பொருளாதாரத்தின் சிறப்பம்சங்கள் மூன்று தருக.
3. ஐந்து நபிமார்களின் பெயர்களையும் அவர்கள் செய்த தொழிலையும் குறிப்பிடுக?

(2+3+5=10 புள்ளிகள்)

05. 1. அஜ்னபி மஹ்ரமி என்றால் என்ன?
2. மஹ்ரமிகளின் வகைகளை ஒவ்வொரு உதாரணங்களுடன் தருக.
3. அஜ்னபிகளுடன் சேர்ந்து வாழக் கடைபிடிக்கவேண்டிய வரையறைகள் ஐந்து குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

06. 1. இஸ்லாமிய வரலாற்றில் இளமைப் பராயத்தில் இஸ்லாத்திற்கு பங்களிப்புச் செய்த நால்வரின் பெயர்களைக் குறிப்பிடுக.
2. உடல் ஆரோக்கியத்தைப் பேணக்கூடிய வழிமுறைகள் மூன்று குறிப்பிடுக.
3. இளைஞர்கள் யுவதிகள் தவிர்த்துக்கொள்ள வேண்டிய ஐந்து விடயங்களை பட்டியற்படுத்துக.

(2+3+5=10 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றுள் ஏதாவது இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. நீரின் வகைகளும் அவற்றின் பயன்பாடும்
2. ஈகையின் பயன்பாடுகள்
3. நடுநிலை பேணல் (வஸதிய்யா)
4. உழைப்பின் முக்கியத்துவம்

(5+5=10 புள்ளிகள்)

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

*அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...*

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
**075 287 1457**